தேதி 04.12.2024 நேரம் மாலை 6.10 மணி

**வணக்கம்**

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – செங்கேனி பழனி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ஆயுர்வேதம் மக்கள் வாழ்க்கையின் ஒருங்கிணைந்த பகுதியாக இருப்பதால் அது குறித்து ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு வலியுறுத்தி உள்ளார்.
- இந்திய கடற்படை தினத்தை ஒட்டி குடியரசு தலைவர், பிரதமர், மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் உள்ளிட்டோர் கடற்படைவீரர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.
- கோவிட் கால கட்டத்தில் இந்திய ஆயுதப்படைகள் திறமையாக செயல்பட்டது குறித்து மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் பாராட்டு தெரிவித்துள்ளார்.
- புதுச்சேரியில் மத்திய குழு ஆய்வு செய்து, கணக்கெடுத்த பின் புயல் நிவாரணம் வழங்கப்படும் என முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

<u>*முர்மு 1* (17)</u>

ஆயுர்வேதம் மக்கள் வாழ்க்கையின் ஒருங்கிணைந்த பகுதியாக இருப்பதால் அது குறித்து மேலும் ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு வலியுறுத்தி உள்ளார். ஒடிசா மாநிலத்திற்கு 5 நாள் பயணம் மேற்கொண்டுள்ள அவர், இன்று காலை புரியில் நடைபெற்ற கோபபந்து ஆயுர்வேத மகா வித்யாலயாவின் 75 ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டார். ஆயுர்வேத சிகிச்சையால் பல நோய்கள் குணமடைகின்றன என்றும், அதற்காக நம்

நாட்டில் பெரும்பான்மையான மக்கள் இன்னும் இந்த மருத்துவ முறையை நம்புகிறார்கள் என்றும் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், மக்களை நோய்களில் இருந்து மீட்டு, ஆரோக்கியமாக வைத்திருக்க நாட்டில் ஆயுர்வேதம் மற்றும் யோகாவை பிரபலப்படுத்த மத்திய அரசின் ஆயுஷ் அமைச்சகம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

முன்னதாக, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு புனித நகரமான புரியில் உள்ள 12 ஆம் நூற்றாண்டின் ஸ்ரீ ஜெகநாதர் கோவிலுக்கு சென்று வழிபட்டார். அவருடன் ஒடிசா முதலமைச்சர் திரு மோகன் சரன் மாஜி மற்றும் அதிகாரிகள் சென்றனர்.

<u>முர்மு 2 (4)</u>

நாளை அவர் ஒடிசா வேளாண் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக் கழகத்தின் 40 ஆவது ஆண்டு பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று உரையாற்ற உள்ளார்.

தொடர்ந்து புவனேஷ்வரில், புதிய நீதிமன்ற கட்டிடத்தையும் அவர் திறந்து வைக்க உள்ளார்.

<u>கடற்படை தினம் 1 (14)</u>

இந்திய கடற்படை தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இதனை முன்னிட்டு ஒடிசா மாநிலம் புரியில் உள்ள நீலகொடி கடற்கரையில் நடைபெற்ற கொண்டாட்டங்களில் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தலைமை விருந்தினராக கலந்துகொண்டார்.

இந்நிகழ்ச்சியில் 15 க்கும் மேற்பட்ட கப்பல்கள், நீர் மூழ்கி கப்பல்கள், 40 க்கும் மேற்பட்ட விமானங்கள், கடற்படை கமாண்டோக்கள் மற்றும் ராணுவ வீரர்களின் சாகச நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

கடற்படையில் உள்ள துணிச்சலான வீரர்கள், ஒப்பிட முடியாத தைரியத்துடனும், அர்ப்பணிப்புடனும் நாட்டின் கடல்களை பாதுகாப்பதாக பிரதமர் தமது சமூக ஊடகப் பதிவில் இந்திய கடற்படை வீரர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். அவர்களின் அர்ப்பணிப்பு நாட்டின் பாதுகாப்பு, மற்றும் செழிப்பை உறுதி செய்கிறது என்றும், கடற்படையின் வளமான கடல் சார் வரலாற்றில் இந்தியர்கள் தலைசிறந்து விளங்குகிறார்கள் என்றும் அவர் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

*__கடற்படை தினம்__* __2 (6)__

மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், இந்திய கடற்படை வீரர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டார். மேலும், இந்திய கடற்படை, தேசிய பாதுகாப்பு கட்டமைப்பு மற்றும் கடல்சார் பாதுகாப்பின் முக்கிய தூணாக விளங்குவதாகவும், இந்திய பெருங்கடல் பகுதியில் முதன்மை, மீட்பு மற்றும் உதவிக்கரமாக திகழ்வதாகவும் தமது சமூக ஊடகப்பதிவில் தெரிவித்துள்ளார்.

*__ஜெய்சங்கர்__* __1 (18)__

இந்தியாவிற்கும், சீனாவிற்கும் இடையிலான சிறந்த உறவுகளை வளர்ப்பதற்கான அடித்தளமாக எல்லைப் பகுதிகளில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையின் முக்கியத்துவத்தை மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வலியுறுத்தி உள்ளார்.

சீனாவுடனான இந்தியாவின் உறவுகளில் சமீபத்திய முன்னெற்றங்கள் குறித்து இன்று மாநிலங்களவையில் உரையாற்றிய அவர், வரவிருக்கும் நாட்களில் இரு நாடுகளுக்கு இடையிலான விவாதங்கள், பதற்றத்தை தணிப்பது மற்றும் பயனுள்ள எல்லை மேலாண்மை குறித்து கவனம் செலுத்தப்படும் என்று குறிப்பிட்டார். கிழக்கு லடாக்கில் 2020 ஆண்டில்

ஏப்ரல், மே மாதங்களில் இந்தியா மற்றும் சீன ராணுவத்திற்கு இடையிலான மோதல் குறித்து டாக்டர் ஜெய்சங்கர் நினைவுகூர்ந்தார். தளவாட சவால்கள் மற்றும் கோவிட் நிலைமை இருந்தபோதிலும் இந்திய ஆயுதப்படைகள் விரைவாகவும், திறம்படவும் செயல்பட்டது குறித்து அவர் பாராட்டு தெரிவித்தார்.

கிழக்கு லடாக்கில் உள்ள டெப்சாங் மற்றும் டெம்சோக் உள்ளிட்ட பகுதிகளில் படிப்படியான செயல்முறை மூலம் படைகளை விலக்கி கொண்டதையும் டாக்டர் ஜெய்சங்கர் எடுத்துரைத்தார். எல்லைப் பிரச்சனையை தீர்க்க இந்தியாவும், சீனாவும் பல ஆண்டுகளாக

<u>*ஜெய்சங்கர்* 2 (10)</u>

பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளன என்றும், நியாயமான மற்றும் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக் கூடிய கட்டமைப்பை நோக்கமாக கொண்ட இருதரப்பு விவாதங்களின் உறுதிப்பாட்டையும் அவர் சுட்டிக்காட்டினார். எல்லை உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதில் மத்திய அரசின் கவனத்தை எடுத்துரைத்த டாக்டர் ஜெய்சங்கர் லடாக்கில் சாலைகள், விமானத் தளங்கள் மற்றும் பிற தளவாட வசதிகளை மேம்படுத்துவதில் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார். இந்த மேம்பாடுகள் தேசிய எல்லைகளை பாதுகாப்பதற்கான மத்திய அரசின் தீர்மானத்தை வெளிப்படுத்துவதாகவும், ஆயுதப்படையின் திறனை அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

<u>*மக்களவை* (12)</u>

நாட்டில் உள்ள 783 மாவட்டங்களில் சுமார் 779 மாவட்டங்களுக்கு 5 ஜி சேவை கிடைப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. நாட்டில் 4.6 லட்சத்திற்கும் மேற்பட்ட 5ஜி அடிப்படை டிரான்ஸ்சீவர் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன என்று மத்திய தகவல் தொடர்பு மற்றும் கிராமப்புற

மேம்பாட்டுதுறை அமைச்சர் டாக்டர் பெம்மசானி சந்திரசேகர் மக்களவையில், இன்று எழுத்துபூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்துள்ளார். தொலை தொடர்பு சேவை வழங்குபவர்கள் கடலோர பகுதிகள் உட்பட நாடு முழுவதும் 5 ஜி சேவைகளை விரிவுபடுத்தி உள்ளனர் என்றும், 4 ஜி மற்றும் 5 ஜி நெட்வொர்க் கிடைப்பதன் மூலம் பயனாளிகள் இடையே ஆன்லைன் வங்கி சேவைகள், மின்னனு வர்த்தகம், ஆன்லைன் கல்வி மற்றும் ஆன்லைன் அரசு சேவைகள் ஆகியவற்றின் பயன்பாடு அதிகரித்துள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

***முதல்வர் ஆய்வு*** (11)

புதுச்சேரியில் புயல் மழையால் பாதிக்கப்பட்ட கிராமப் பகுதிகளையும், நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களையும் முதலமைச்சர் திரு ரங்கசாமி நேரில் சென்று பார்வையிட்டு, அவர்களுக்கு ஆறுதல் கூறினார். மணவெளி தொகுதிக்கு உட்பட்ட டிஎன் பாளையம், தேடுவார்நத்தம், அபிஷேகப்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளுக்கும் சென்று முகாம்களில் உள்ள மக்களை சந்தித்தார். அவருடன், சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம், வேளாண்துறை அமைச்சர் திரு தேனி ஜெயக்குமார் மற்றும் அதிகாரிகளும் சென்றனர். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த முதலமைச்சர் மத்திய குழு ஆய்வு செய்து, கணக்கெடுத்த பின் நிவாரணம் வழங்கப்படும் என்றும், மீண்டும் மத்திய அரசுக்கு கடிதம் எழுத உள்ளதாகவும் தெரிவித்தார்.

***புதுச்சேரி பள்ளிகள்*** (12)

பெஞ்சல் புயலால் புதுச்சேரியில் உள்ள பள்ளி, கல்லூரிகளுக்கு கடந்த 27 ஆம் தேதி முதல் தொடர் விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் இன்று பள்ளி மற்றும் கல்லூரிகள் மீண்டும் திறக்கப்பட்டன. அதே நேரத்தில், தண்ணீர் தேங்கிய தவளக்குப்பம், காக்கையன்தோப்பு,

மூலக்குளம், கூனிச்சம்பட்டு, கரையாம்பத்தூர், கடுவனூர், கிருஷ்ணாபுரம், மணமேடு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள அரசு தொடக்கப்பள்ளிகள், பண்டசோழநல்லூர், மணலிப்பட்டு, பூரணாங்குப்பம், டிஎன் பாளையம், பனையடிக்குப்பம், உறுவையாறு, திருக்கனூர், பனித்திட்டு, முத்தியால்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள 21 நடுநிலை மற்றும் உயர் நிலைப்பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டிருந்தது. மேலும், தென்பெண்ணையாற்றின் வெள்ள நீர் சூழ்ந்துள்ள பாகூர் கொம்யூனில் உள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது.

*ரங்கசாமி* (11)

பெஞ்சல் புயல் காரணமாக கடந்த 1 வாரமாக மீன்பிடி தொழிலுக்கு செல்லாமல் இருந்த புதுச்சேரி மற்றும் காரைக்கால் மீனவர்கள் டிசம்பர் 1 ஆம் தேதி முதல் மீண்டும் மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர். கோடியக்கரைக்கு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த போது எல்லை தாண்டி மீன் பிடித்ததாக 18 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்தனர். அவர்களது விசைப்படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட மீனவர்களை மீட்க கோரி புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார். சிறை பிடிக்கப்பட்ட மீனவர்களை விடுவிக்க முன்னுரிமை அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அக்கடிதத்தில் அவர் வலியுறுத்தி உள்ளார்.

காரைக்கால் (9)

வங்க கடலில் உருவான பெஞ்சல் புயல் மற்றும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட புதுச்சேரி மக்களுக்கு உதவிடும் வகையில் பல்வேறு அமைப்பினர் மூலம் பெறப்பட்ட சுமார் 5 லட்ச ரூபாய் மதிப்பிலான உணவுப் பொருட்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்களை காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திரு மணிகண்டன் முன்னிலையில், இன்று ஒருநாள் மாவட்ட ஆட்சியராக தேர்வு செய்யப்பட்ட 4 மாணவர்கள் கொடியசைத்து புதுச்சேரிக்கு அனுப்பி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அலுவலக கண்காணிப்பாளர் திரு பாலு, மாவட்ட ஆட்சியரின் செயலர் திரு பாஸ்கர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பஞ்சாப் (8)

பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் பொற்கோவிலின் நுழைவு வாயிலில் முன்னாள் துணை முதலமைச்சர் திரு சுக்பீர் சிங் பாதல் மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. இன்று காலை தூய்மை பணியில் ஈடுபட்டிருந்த அவர் மீது துப்பாக்கி சூடு நடத்திய காலிஸ்தான் இயக்கத்தின் ஆதரவாளர் நரேன் சிங் என்பவர் போலீசாரால் கைது செய்யப்பட்டார். இது குறித்து பஞ்சாப் முதலமைச்சர் திரு பகவந்த் சிங் மான், கேரள முதலமைச்சர் திரு பினராயி விஜயன், காங்கிரஸ் மூத்த தலைவர் திரு பிரதாப் சிங் பஜ்வா உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

நிலக்கரி (11)

நிலக்கரி துறையின் நீடித்த வளர்ச்சிக்கு சுற்றுச்சூழலை பாதுகாத்தல், வளங்களை பாதுகாத்தல், சமூகத்தின் மீதான அக்கறை, காடுகள் மற்றும் பல்லுயிர் பெருக்க பாதுகாப்பு ஆகியவற்றுக்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்று மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் திரு கிஷண் ரெட்டி தெரிவித்தார். மக்களவையில்

இன்று கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் பதில் அளித்த அவர், சுற்றுச்சூழல் குழுவின் நிபந்தனைகளுக்கு இணங்க சுரங்கங்கள் இயக்கப்படுவதால், சுற்றுசூழல் நிலைத்தன்மை உறுதி செய்யப்படுகிறது என்றார். சுரங்கத் திட்டம் மற்றும் சுரங்க மூடல் திட்டத்திற்கான வழிகாட்டுதல்கள், வளங்களை பாதுகாத்தல், சுற்றுச்சூழலை பாதுகாத்தல் மற்றும் சமூகத்தின் மீதான அக்கறை ஆகியவற்றை அமைச்சகம் நோக்கமாக கொண்டுள்ளது என்று கூறினார்.